**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. II**
**DINDIGUL.**

**C.C.No.515/2018**

**Prosecution Witness :3**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : வெங்கடேசன் | **Caste** | : |
| **Father's Name** | : ரெங்கநாதன் | **Calling** | : டிரைவர் |
| **Village** | : அசோக் நகர் | **Religion** | : |
| **Taluk** | : திண்டுக்கல் | **Age** | : 50 |
| | | **Dated** | : 30.06.2025 |

**30.06.2025**
இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி–6 **திரு.வெங்கடேசன்** ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு **அ.சா.** 3 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**1ம் எதிரி இறப்பின் காரணமாக அவர் மீதுள்ள குற்றச்சாட்டு அற்றுப்போய்விட்டது. 2 வது எதிரி ஆஜர் இல்லை. 355 BNSS Petition filed and allowed.**

**முதல் விசாரணை**

நான் தற்போது திண்டுக்கல் அசோக் நகரில் குடியிருந்து டிரைவராக வேலை செய்து வருகிறேன்.வழக்கின் புகார்தாரர் ஜார்ஜ் ஸ்டிபன் விக்டோரியா என்பவரை தெரியும். கடந்த 2016 ம் வருடம் தேதி, மாதம் ஞாபகம் இல்லை. ஜார்ஜ் ஸ்டிபன் விக்டோரியா அவர்களது குடும்பத்தோடு மதுரை அரவிந்த் மருத்துவமனைக்கு சென்று விட்டு அன்றைய தினம் மாலை 04.00 மணியளவில் திண்டுக்கல்லில் உள்ள ஜார்ஜ் ஸ்டிபன் விக்டோரியாவின்

வீட்டிற்கு வந்து பார்த்த போது அவரது வீட்டில் கிரில் கேட்டு பூட்டுடன் உடைக்கப்பட்டிருந்தது. அவரது வீட்டின் பெட் ரூம் கதவு உடைக்கப்பட்டு இருந்தது. பீரோ லாக்கர் உடைக்கப்பட்டிருந்தது. அதில் வைத்திருந்த நகைகள் காணவில்லை என்றும் திருடு போய் இருப்பதாக சொன்னார்கள். அதனால் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார்கள். போலிசார் வந்து விசாரித்தார்கள்.

**<u>2 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

சம்பவத்தன்று அசா. 1 ன் நான்கு சக்கர வாகனத்திற்கு டிரைவராக சென்றிருந்தேன் என்றால் சரிதான். அசா.1 வீட்டிற்கு அருகில் சுமார் 4-5 வீடுகள் உள்ளது என்றால் சரிதான்.அந்த வீடுகளில் CCTV கேமிராக்கள் உள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் சம்பத்தின் போது இல்லை. சம்பவத்தன்று காலை 08.00 மணிக்கு சென்று மீண்டும் மாலை 04.00 மணிக்கு தான் வந்தோம் என்றால் சரிதான்.வீட்டை விட்டு வெளியே சென்ற போது சம்பவத்தை பற்றி அக்கம் , பக்கம் வீட்டார் அசா .1 க்கு போன் செய்து தெரிவிக்கவில்லை என்றால் சரிதான்.நான் அசா.1 வீட்டிற்கு திரும்பி வந்த போது அவரது வீட்டிற்குள் சென்று பார்த்தேன் என்றால் சரிதான்.நான் முதல் விசாரணையில் சொன்னது போல் கிரில் கேட்டு,பூட்டு மற்றும் கதவு ஆகியவை உடைக்கப்பட்ட அதே இடத்தில் தான் இருந்தது என்றால் சரிதான்.அசா.1 எனக்கு நீண்ட நாட்களாக நண்பர் என்றால் சரிதான்.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

DINESH KUMAR C

Digitally signed by DINESH KUMAR C
Date: 2025.07.01 09:52:12 +0530

Judicial Magistrate No.II
Dindigul.